# இனப்பிரச்னை தீர்க்கும் நோக்கம் அரசுக்கு இல்லை


விலை ரூபா 5-00

# ஈழநாடு

**THE EELANADU**
**NATIONAL TAMIL DAILY**

மலர் 55 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 20 இதழ் 139
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 04 — 07 — 1993


(யாழ்ப்பாணம்)

தமிழரின் தேசிய இனப் பிரச்னையை நேர்மையான முறையிலும், சமாதான வழியிலும் தீர்த்துவைக்கும் எண்ணம் புதிய அரசுக்கும் இல்லை என்பதை போர்க் கைதிகள் விவகாரத்தில் அரசு நடந்து கொண்டது தெளிவாகிவிட்டது.

இவ்வாறு விடுதலைப்புலி

(4-ம் பக்கம் பார்க்க)

## நாளை கரும்புலிகள் நாள் ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு மக்கள் ஒவ்வொருவரும் கரும்புலிகளை நினைவு கூருமுகமாக சிற்றூர், வட்டார ரீதியாக சிரமதான வேலைகளில் ஈடுபட்டு வருவதுடன் யூலை 5-ம் திகதியன்று கரும்புலிகளின் நினைவுத் தூபிகள், நினைவுருவப் படங்கள் அமைந்துள்ள இடங்களில் விளக்கேற்றி, மலர் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.

மாணவர்கள், ஆசிரியர்கள், கொத்தணி மட்டத்தில் ஒன்று கூடி கரும்புலிகளை நினைவு கூர்ந்து கருத்துரைகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பொது ஸ்தாபனங்கள், முக்கிய இடங்கள், இல்லங்கள் தோறும் படங்கள் வைக்கப்பட்டு மக்கள் மரியாதை

(4-ம் பக்கம் பார்க்க)

## மூன்று மாதங்களில் நிவாரணம் நிறுத்தம்:

# மட்டு. அகதிமுகாம்களைமூடிவிட அரசு தீவிர நடவடிக்கை!

## இடம் பெயர்ந்தோர் கடும் எதிர்ப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல இடம்பெயர்ந்தோர் முகாம்களையும் மூடுவதற்கான நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக ஈடுபட்டுவருவதுடன் மூன்று மாதங்களுக்குப் பின்னர் உலர் உணவு நிவாரணத்தையும் நிறுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு இடம் பெயர்ந்த மக்கள் தமது கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் அனைத்தையும் நிறுத்துவதும் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர் என வெளியுலகிற்கு காட்டுவதுமே இதன் நோக்கமாகும்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பராமரிப்பிற்கென வழங்கப்பட்ட நிதி நிறுத்தப்பட்டுள்ளதுடன் சில இடம் பெயர்ந்தோர் முகாம்கள் மூடப்படவுள்ளது.

இதே வேளை இன்னும்

(2-ம் பக்கம் பார்க்க)

## பிரேமாவுக்கு மரியாதைசெலுத்தவே கம்உதாவ குறுகிய அளவில் நடத்தப்பட்டது

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு மரியாதை செலுத்தும் முகமாகவே 'கம்உதாவ' நிகழ்ச்சி குறுகிய அளவில் நடாத்தப்பட்டது என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிரிசேன கூரே பி. பி. ஸி. சிங்கள ஒலிபரப்பு சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஏழாயிரம் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

(சென்னை)

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள 7000 இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டம் கட்டமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட இருக்கிறார்கள் என்று

(4-ம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாண சபையை ஐ. தே. க. கைப்பற்றும்?

(கொழும்பு)

மேல் மாகாண சபை தற்பொழுது பொதுசன ஐக்கிய முன்னணியிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சி மாறும் கட்டத்தில் உள்ளது என்று 'ரசவல' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்தால் இந்த மாற்றங்கள் ஏற்படும்.

மேல் மாகாண சபையில்

(4ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு உணவுபொருள் தொடர்ந்து அனுப்பப்படும்

(கொழும்பு)

வடபகுதிக்கு லொறிகளிலும், கப்பல்களிலும் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வருவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எம். பி எம். ரபீக் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவிற்கு 25 லொறிகளில் அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எம். டி. என்றினும்

(4-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரை விடுவிக்க அரசு தாமதம் காட்டுகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளிடம் உள்ள 33 சிங்கள பொலிஸ்காரரை விடுவிப்பதில் தாமதமேற்படுத்துவது அரசாங்கத்தின் செயல்தான் என்று தென்பகுதி மக்கள் கருதுகிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கைகளும் இந்தப் பொலிஸாரின் விடுதலைக்கு குந்தகமாக அமைந்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றன. —ற

## தமிழக கரையோரத்தில் தீவிர பாதுகாப்பு

(சென்னை)

தமிழ்நாடு மாநில போரப் பகுதியில் பாதுகாப்பு படையினரின் ரோந்து நடவடிக்கையை இந்திய மத்திய அரசு பலப்படுத்தியிருக்கிறது. இந்த மாநிலத்தின் கரையோரப் பகுதிகளில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் இறக்கப்பட்டு வருவதாக கிடைத்த தகவலையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படு

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையை துண்டாட ராணுவம் அனுமதிக்காது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அமைதியான அரசியல்நிலை உருவாகும் வரை, இராணுவத்தினர் கடமையாகப் பாடுபடவேண்டும்

இவ்வாறு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் இராணுவத்தினர் மத்தியில் கூறினார்.

இலங்கையை துண்டாட இராணுவம் ஒருபோதும் அனுமதிக்காது. இது எமது தாய

(4-ம்பக்கம் பார்க்க)

## றுகுண கப்பலில் கொள்ளை; அரசு தரப்பு மறுக்கிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இலக்கம் யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றிச் சென்ற றுகுணு கப்பலில் கொள்ளை நடந்ததாக வெளிவந்த செய்தி தவறானது என்று தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிலுள்ள கூட்டுப்படை தலைமையகத்தின் இணைப்பதிகாரி செமோடர் புத்திக சிறிவர்த்தன இச்செய்தியை ஊர்ஜிதம் செய்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலுள்ள போர்க் கைதிகளை விடுவிப்பதற்கு மாற்றாக

(4-ம் பக்கம் பார்க்க)

## தொப்பிகலகாடு மோதலில் மூன்று ராணுவம் படுகாயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல்கள் இடம்பெற்றதாக இராணுவப்பட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலின்போது படையினர் தரப்பில் மூவர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வரதர் கதை மலர் - 1. அநு வை நாகராஜன் எழுதிய 'அவன் பெரியவன்'— சிறுவர்க்கான சுவையான கதைநூல் வெளிவந்துவிட்டது. ரூபா 12/- விற்பனையாளருக்கு கழிவுண்டு. ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம். (ஏ 3224)

### A/L மாதிரி வினாத்தாள்

விஞ்ஞான, வர்த்தக, கலை பிரிவு அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம் விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். BOND 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ-274)

### பயிற்சி வினாத் தாள்கள்

4' 5, 6, 7, 8, 9, 10 O/L வகுப்புகளிற்கான அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். BOND, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ-275)

### புலமைப் பரிசில்

பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். BOND - யாழ்ப்பாணம், பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம் S K. சாமி, நெல்லியடி, பவிக்கு சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (இ-276)

### பாலாஜி புத்தகசாலை

புத்தம் புதிய டிசைன்களில் கண்ணுக்கு மெருகூட்டும் நவீன ரகப் பிறந்த நாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 15% கழிவுபடி. உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள் 16 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ 3229)

— பெயர் மாற்றம் —

யாழ்நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்

G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —

(சி 252)

# SCIENCE ACADAMY

நெல்லியடி

(ஆசிரியர் குழு)

**A/L 94, 95**

திரு. கணேசன்

திரு. குணசீலன்

திரு. வெக்டர்

திரு. சண்

(பௌதிகவியல் வகுப்புக்கள் அனுமதிகள் இம்மாதத்துடன் நிறுத்தப்படும்)

சி-277

### மணமகன் தேவை

யாழ் இந்து சமயத்தைச் சேர்ந்த 37 வயதுடைய பட்டதாரி ஆசிரியையான தமது சகோதரிக்கு 42 வயதிற்கு உட்பட்ட மணமகனை அவரது சகோதரர்கள் தேடுகின்றார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முதற் கடிதத்திலேயே முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 280, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (இ280)

### கல்வி

G. C. E. O/Lல் கட்டாய பாடமாகிய கணிதப் பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யோகேந்திரா வீதி, சுண்டுக்குழி. (சி-279)

### மூன்று மாதங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாதங்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுமென அரசு அறிவித்துள்ளது

மன்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 13 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், கொக்குவில் ஆகிய இடங்களிலுள்ள முகாம்களும்] சித்தாண்டி இடம்பெயர்ந்தோர் முகாமும் முதலில் மூடப்படவுள்ளன.

இவ்வாறு மூடப்படும் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள மக்கள் பாதுகாப்பற்ற முறையில் நெருக்கமாக குடியமர்த்தப்படவுள்ளனர் எனவும் இதனையடுத்து அவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் பெரும்பாலானவற்றை அரசு திட்டமிட்டபடி மூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# செய்திச் சிதறல்

### மெய்வல்லுநர் போட்டி

(மானிப்பாய்)

நவாலி சென் பீற்றேஸ் றோ. க. த. க. பாடசாலையில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் மஞ்சள் இல்லம் 1வது இடத்தையும், நீல இல்லம் 2வது இடத்தையும், பச்சை இல்லம் 3வது இடத்தையும் பெற்றுக்கொண்டன. (71)

### அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலி மேஜர் தாகூர் அழகனுக்கு தோரணம் கறுப்புக் கொடி கட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ் நகர்ப்பகுதி, திருநெல்வேலி, மற்றும் இடங்களில் தோரணங்கள் கறுப்புக் கொடிகள் கட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது. (158)

### பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-00மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும். (56)

### இடமாற்றம்

(கொழும்புத்துறை)

நாவாந்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ். வண்ணார்பண்ணை கிளை காங்கேசன்துறை வீதியில் உள்ள இலுப்பையடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (154)

### புதிய அட்டை

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தமது பாவனையாளர்களுக்கு புதிய பங்கீட்டு அட்டைகளை தற்போது விநியோகம்செய்து வருகின்றனர். (71)

# அறிவித்தல்

## 1991-ம் ஆண்டு ஜீ. ஸீ. ஈ. (உயர்தரம்)

## விசேட பரீட்சை

மேற்படி பரீட்சையினால் பாதிப்படைந்த சகல மாணவ மாணவிகளையும் (பொறியியற் பிரிவு தவிர்ந்த) பெற்றோர்களையும் 93-07-06ம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ மண்டபத்தில் ஒன்று கூடும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இணைப்பாளர்
நடவடிக்கை குழுவின் சார்பில்

யாழ். இந்துக் கல்லூரிப்
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
93 - 07 - 02. (ஏ- 3230)

# கேள்வி அறிவித்தல்

## கல்வித் திணைக்களம்

## யாழ்ப்பாணம்

யாழ். பிரதேசகல்வித்திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள் வழங்கலும், விநியோகித்தலும்

மேற்படி தளபாடங்கள் வழங்கலும் விநியோகித்தலுக்குமான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 07 - 07 - 1993 - ம் திகதி காலை 10-00 மணிவரை பிற்போடப்பட்டுள்ளது. கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும்.

பிரதேச கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
02 - 07 - 1993. (இ-3227)

# பாண் 8/-

மாவின் விலை அரசாங்கத்தால் கிலோவுக்கு 1-35ஆல் அதிகரிக்கப் பட்டுள்ளதன் காரணத்தால் பாண் ஒன்றின் விலை -/50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது,

என்பதனை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம். பாணின் விலை, நிறை, தரம் ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு எழுதவும்.

ந. பாலவிநாயகர்,
மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
மனிமஸ் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யா. மா. பே. உ. ச. (இ-278)

# வேலை வாய்ப்பு வெற்றிடம்

பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து தொழில் வாய்ப்பற்றிருக்கும் கலை, வர்த்தக முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, சுயவிபரங்களுடனான விண்ணப்பங்களை உங்கள் பகுதி மாணவர் அமைப்பு கோட்ட செயலகங்களில்

**15 - 07 - 93க்கு முன்னராக ஒப்படைக்கவும்.**

பொறுப்பாளர்,
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,
தமிழீழம்.

(ஏ-3231)

ஸ்கந்தன் துணை

''உண்மையே உயர் அறம்''

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க

# பழைய மாணவர் ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

மேற்படி கூட்டம் 04-07-1993 இன்று ஸ்கந்தா மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்:

| | |
|---|---|
| மு. ப. 9-00 — 10-00 | மணிவரை பதிவு செய்தலும், வரவேற்றல், பழைய மாணவர் ஒன்றுகூடல். |
| மு. ப. 10-00 — 12-00 | மணிவரை துடுப்பெடுத்தாட்டமும், மற்றும் விளையாட்டுக்களும் (Indoor Games). |
| ந. ப. 12-00 | மதிய போசனம். |
| பி. ப. 2-00 | மணிக்கு மாணவர்களை பாராட்டி கௌரவித்தல். |
| பி. ப. 2-30 | மணிக்கு பொதுக் கூட்டம். |
| பி. ப. 5-30 — 6-30 | மணிவரை உதைபந்தாட்டமும் மற்றும் விளையாட்டுக்களும் Indoor Games). |

கந்தரோடை
3-7-1993

சேது. விபுலானந்தா
செயலாளர்,

குறிப்பு: 30-06-93 வரை அங்கத்தவராவது விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளப்பெற்றமையால் அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பற்றுச்சீட்டு, அங்கத்துவஅட்டை மற்றும் வரவேற்புக் கடிதங்கள் அனுப்ப இயலாமையினால் தயவு செய்து இவற்றை 04-07-93 இன்று காலை 9-00 மணிக்கு (ஞாயிற்றுக்கிழமை) மண்டப நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

நன்றி (எ- 3228)

### மணிவாக்கு

மனிதன் அடையக் கூடிய உயர்ந்த பொருள், அறிவு என்பர். ஆனால் அதுமட்டுமல்ல அறிவினுள் கலந்த அனுபவமே உயர்ந்தது.

—ரோரோ

## நமது நோக்கு

### நீரைத் தேக்குவோம்!

தமிழ் மக்களின் உரிமைக் குரலை நசுக்கி நிரந்தர அடிமைகளாக வைத்திருக்க இராணுவம் மாத்திரம் தான் பயன்படுகின்றதா?

மருந்து, உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களைப் போதியளவு கிடைக்க வழியில்லாமற் செய்துவிட்டால், பொது மக்களின் உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டுவிடும் என்ற கனவோடு பொருளாதாரத்தடை தொடருகிறது.

தடையின் தாக்கம் இதனோடு நின்றுவிடவில்லை. எமது பகுதி வளங்கள் சீராகப் பாதுகாக்கப் படாதுபோக வழி ஏற்படுகின்றது. எதிர்காலத்தில், பொருளாதாரச் சீரமைப்புக்குச் சூந்தகம் விளைகின்றது.

அன்றாடப் பிரச்சனைகளில் மூழ்கியிருக்கும் பொதுமக்கள் பலருக்குப் பொருளாதாரத் தடையினால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி முற்றாக அறிந்திட நியாயமில்லைத்தான்.

நாட்டுப்பற்றுள்ள எவரும் இது பற்றிச் சிந்தியாதிருக்கமுடியாது.

உதாரணமாக, சீமெந்துத் தடையினால், பொருளாதாரவளர்ச்சிக்கான உள்ளகக் கட்டமைப்பு வேலைகள் ஸ்தம்பித்துவிட்டன.

இதைவிட, இப்பகுதி மக்களின் உணவுற்பத்திக்குத் தேவையான நீரைச் சேமித்து வைக்கும் குளங்கள் சீராகப் பேணப்படாவிடில் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவையாகும் என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

குளங்கள் உடைப்பெடுக்காது பாதுகாக்கப்பட வேண்டும். அவை ஆழமாக்கப்பட்டு, கிடைக்கும் மழை நீர் தேக்கிவைக்கப்படவேண்டும். அல்லாவிடில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிடும்; நன்னீர் உவர் நீராகும் ஆபத்து நெருங்கிவிடும்.

இதேவேளை —தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இதுபற்றி அக்கறைகொண்டு, ஆய்வு நடாத்தி, எமது பகுதியின் எதிர்காலச் சுபீட்சத்திற்கு நல்ல பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைப் பிரிவில் பல குளங்கள் ஆழமாக்கப்பட உள்ளன எனச் செய்தி வந்துள்ளது. சங்கானை, சங்கரத்தை, அராலி ஆகிய இடங்களிலுள்ள சில குளங்களின் புனரமைப்பு உடனடியாக ஆரம்பமாகப்போகின்றது. பொருண்மிய நிறுவனத்தின் அநுசரணையுடன் இவ் வேலைகள் நடைபெறவுள்ளன.

இத்தகைய நல்ல முயற்சிகளுக்குப் பொதுமக்கள் போதுமான ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புகிறோம்.

# பாக். அரசியலில் சிக்கல் நிலை; இராணுவம் தலையிட்டு தீர்க்க முயற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசியலில் ஒரு சிக்கலான நிலை உருவாகியுள்ளது இந்நிலையை தீர்த்து வைப்பதற்கு பாகிஸ்தான் இராணுவம் தலையிட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக் கானுக்கும் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கும் இடையில் முறுகல் நிலை மோசமடைந்து வருவதை யடுத்தே அரசியல் சிக்கல் அங்கு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் அரசியல் செல்வாக்கு மிகுந்த பஞ்சாப் அரசை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர குலாம் இஷாக்கானும், நவாஸ் ஷெரீப்பும் தமது அதிகாரத்தைப்பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் பஞ்சாப் அரசு இவர்கள் இருவருக்கும் மத்தியில் சிக்கித்தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தை உயர் நீதிமன்றம் வரைசென்று தமக்கு சாதகமாக்கிக் கொள்ளப் போனதாக பிரதமர் நவாஸ் ஷெரீப் சூளுரைத்துள்ளார்.

இந்தக் கட்டத்தில் தான் பாகிஸ்தான்இராணுவம் இந்த சிக்கலைத் தீர்த்து வைக்க முன் வந்தது.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி பிரதமர் நவாஸ் ஷெரீப்பை அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் சந்தித்து சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக அவரோடு உரையாடியிருக்கிறார்.

பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் ஒத்துப்போகுமாறும், இன்னும் ஒரிருமாதங்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு புதிய தேர்தலை அறிவிக்குமாறும் பாகிஸ்தான் தளபதி பிரதமர் நவாஸ் ஷெரீப்பைப் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து தாம் தமது அமைச்சரவையுடனும் கட்சித் தலைவருடன் கலந்து பேசி முடிவு சொல்வதாக திரு. நவாஸ் ஷெரீப் பதில் தெரிவித்துள்ளார். (இ)

# பிலிப்பைன்ஸ் படகு விபத்தில் 226 பக்தர்கள் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸில் படகொன்று கவிழ்ந்ததில் 226 பேர் பலியாகியுள்ளனர். நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் 30 பேரைக்காணவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தப் படகில் பக்தர்களே பயணம் செய்ததாகவும் படகு முற்று முழுதாக இடவசதி இல்லாமல் பக்தர்களினால் நிரம்பிவழிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# கரும்புலிகள் தினம்: பல்வேறு நிகழ்ச்சிகள்

(திருநெல்வேலி,

கரும்புலிகள் தினம் நாளை ஜூலை 5ம் திகதி பல இடங்களிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

பாடசாலைகள் தத்தமது கொத்தணி மட்டத்தில் கரும் புலிகள் நினைவாக நிகழ்வுகளை நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

மற்றும் பொது நிறுவனங்களும் இந்நாளை கொண்டாடவுள்ளன. கரும் புலிகளின் நினைவாக இந்நிகழ்வுகள் இடம்பெறஉள்ளன.

வீதிகள் வானங்கள் பஸ் நிலையங்கள் எங்கும் கரும்புலிகள் நினைவு சுவரொட்டிகள் பதாகைகள் கட்டப்பட்டு காட்சியளிக்கின்றன. (159)

## விம்பிள்டன் டென்னிஸ்: இறுதி ஆட்டத்தில் இன்று அமெரிக்கர் இருவர் போட்டி

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன் மோதலில் இம்முறை போட்டியிட இரு அமெரிக்கர்கள் தெரிவு செய் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் உலக முன்னணி ஆட்டக்காரரான ஸ்ரீபன் எட்பேட், அமெரிக்க வீரரான ஜிம்கேரியரிடம் தோல்வியடைந்தார்.

மற்றொரு அரைஇறுதியாட்டத்தில் மூன்று தடவைகள் தொடர்ந்து விம்பிள்டன் சாம்பியன்பட்டத்தை வென்ற ஜேர்மன் நாட்டு வீரரான மொறிஸ் பேக்கர் அமெரிக்க ஆட்டக்காரரான பீற்சம் பிரஸிடம் தோல்வியடைந்தார்.

இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இன்று அமெரிக்காவின் சுதந்திர தின நாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரபல அமெரிக்க டென்னிஸ் ஆட்டக்காரரான ஜோன்மக்கன்ரோவுக்கு பின், விம்பிள்டன்டென்னிஸ் இறுதி ஆட்டத்தில் அமெரிக்கா விளையாடத்தெரிவானது. இதுவே முதல் தடவையாகும். (வி)

## மார்ச் மாத உதவிப் பணம்

பண்டத்தரிப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் காச, புற்று, தொழு நோயாளர்களுக்கு மார்ச் மாதத்துக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது. இடம்பெயர்ந்த பல நோயாளர்கள் இக்கொடுப்பனவுகளை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என்றும், விரைவில் இப்பணத்தை அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் சமூகசேவை உத்தியோகத்தர் க. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். —72

## தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்கள் பதிவு செய்யவேண்டும்

(உடுவில்)

1991 முதல் 93 வரை 1992 முதல் முதல் 94 வரை 1993 முதல் 95 வரையான ஆண்டு காலப்பகுதிகளில் தொலைக் கல்விப் பயிற்சி பெற்றுவரும் சகல பயிற்சி ஆசிரியர்களும் 300 ரூபா கட்டணம் செலுத்தி பதிவு செய்துகொள்ளவேண்டும் என தேசிய கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது.

பயிற்சி ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பயிற்சி நிலையங்களிலேயே பணத்தை செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பத்து தொலைக் கல்வி நிலையங்களில் ஆயிரத்து முன்னூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். —109

## முகாம்களிலுள்ள சுகாதார பிரச்னை பற்றி ஆராய்வு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் நிலவும் சுகாதாரம் சம்பந்தமான பிரச்னைகளையும், போஷாக்கு உணவு சம்பந்தமான பிரச்னைகளையும் ஆராய்ந்து, அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை சண்டிலிப்பாய் பிரதேசச் செயலாளராக அண்மையில் பதவியேற்ற திரு. கா. சந்திராசாமேற் கொண்டு வருகின்றார்.

இப்பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களின் பொறுப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகளைக் கடந்த மாதம் அழைத்து அவர்கள் மூலம் மேற்படி அகதி முகாம்களில் இடம் பெயர்ந்த மக்கள் அனுபவித்து வரும் பல்வேறு கஷ்டங்களையும், அவர்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்னைகளையும் விபரமாகக் கேட்டறிந்து கொண்டார். (72-வி)

## இராசி பலன்

04-07-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆனி 20)

பிரதமை வைகறை 5-44 வரை, பூரசடம் மு. இ. 9-34 வரை, இராகுகாலம் மாலை 4-27 முதல் 5-57 வரை, சுப நேரம் காலை 8-57 முதல் 10-27 வரை. சித்தாமிர்தம்.

மேடம்: பொருள் நஷ்டம், தகுதியற்ற செயல், வெறுப்பு.

இடபம்: மித்திரவிரோதம் மனவேதனை, அலைச்சல்.

மிதுனம்: சத்துரு ஜயம், பேச்சுத்திறன், பணவரவு.

கடகம்: குற்றமற்ற நினைவு, உற்றார் வருகை, குடும்ப சுகம்.

சிங்கம்: பணியால் தொல்லை, கருத்து மோதல், பயம்.

கன்னி: பெண் துன்பம், சகோதர வெறுப்பு, புத்தி தடுமாற்றம்.

துலாம்: தெய்வபக்தி, மேலானநிலை, பயணம்.

விருச்சிகம்: புத்திரர் செலவு, காரியதாமதம், யோசனை.

தனுசு: குடும்பசுகம் மேலதிகாரிகள் ஆகி, உல்லாசம்

மகரம்: மனைவிக்கு துன்பம், முட்டிமோதல், வேண்டாத தொல்லை.

கும்பம்: காரிய பலிதம், தொழில் வாய்ப்பு, இலாகம்.

மீனம்: இன்பத்தரும் நிகழ்ச்சி, குடும்பசிறப்பு, புதிய நட்பு.

— ஜோதிடர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி அறவழி பாலர்பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி மேற்படி பாடசாலை அபிவிருத்திச்சபை தலைவர் திருமதி வி. ரஞ்சினி தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஞானக்குழந்தை இல்லம் பாலர்பாடசாலைகளின் இரண்டாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1-00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர விளையாட்டுஅரங்கில் நடைபெறும்.

திருமதி சாந்தினி திருச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் வைத்தியக் கலாநிதி எஸ் கிருஷ்ணதாஸ் பிரதம விருந்தினராகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். மதி நிற்றாரவைப் பொறுப்பாளர் திரு. பிரசாத் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (162)

0 0 0

(கொழும்புத்துறை)

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 74-வது ஆண்டு விழா வை யொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு வடமராட்சி தேசிய சரபந்தாட்டம் (செட்அப்) வலைபந்தாட்டம் என்பவை மின்னொளியில் இந்நிலையத்தில் நடைபெறவுள்ளது. வலைபந்தாட்டத்தில் அரியாலை ஐக்கிய கழகம் 'ஏ' யை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழகம் 'பீ' விளையாடுகிறது. சரபந்தாட்டத்தில் (செட்அப்) காங்கேசன்துறை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் விளையாட்டுக்கழகம் ஏ' விளையாடுகிறது. (154)

0 0 0

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜங்களின் சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் சம்மேளனத்தின் தலைவர் திரு. வி. செல்வராசசிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகரிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (72)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் - நந்தாவில் அருள்மிகு கற்புலத்து மனோன்மணிஅம்பாள் ஆலய பூங்காவன திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதிஉலாவரும் காட்சியும், அதனை தொடர்ந்து விசேட நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதி பரிஜோவான் முதலுதவிச் சங்கமும் படையும் இணைந்து இன்று 4ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை வருடாந்த விழாவை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கொண்டாடுகின்றன. (65)

## மண் சரிவினால் 18 பேர் பலி!

(கல்கத்தா)

மேற்கு வங்காளத்தில் டார்ஜிலிங் மாவட்டத்தில் பல பகுதிகளிலும் ஏற்பட்ட நிலச்சரிவுகளினால் 18 பேர் பலியாகியுள்ளனர்.

பல வீடுகள் சேதமாகியதுடன் பல போக்குவரத்து தொடர்புகளும் அப்பகுதியில் துண்டிக்கப்பட்டுவிட்டன.

இதுவரை 10 சடலங்கள் மீட்கப்பட்டன. மீட்புப்பணி தொடருகிறது. (வே)

# பல்கலைக்கழக மாணவர்கள் பலர் மனநோயால் பாதிப்பு

(கொழும்பு)

மனநோயினால் பீடிக்கப்படும் பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது

பலதரப்பட்ட பொருளாதார சமூக காரணிகளே இதற்குக் காரணமாகும். மாணவிகளிலும் பார்க்க மாணவர்களே அதிக எண்ணிக்கையில் மனநோயினால் பீடிக்கப்படுகிறார்கள்.

1991-ம் ஆண்டில் மாத்திரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 123 பட்டதாரி மாணவர்கள் பல்கலைக்கழக வைத்திய நிலையத்தில் மனநோய்க்கென சிகிச்சை பெற்றுள்ளனர்.

ராக்கிங் சம்பந்தமான அச்ச உணர்வுகள் இதனால் ஏற்படும் தீய விளைவுகள் பணக்கஷ்டம், ஆங்கில மொழி தெரியாததால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை வதிவிட வசதிக்குறைவு, உணவுப் பிரச்னை புதிய சுற்றுடலுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள இயலாமை என்பனவே மனநோய் ஏற்படுவதற்குரிய காரணங்களாக அமைந்துள்ளன

உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய பின்னர் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு பல வருடங்கள் மாணவர்கள் காத்திருப்பதும் மனக்கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் மனநோய் ஏற்படுவதற்கு காதலும் ஒரு காரணமாகும் என்றும் கூறப்படுகிறது. (ம-இ)

# பொருளாதார தடையால் யாழ்மக்கள் கஷ்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரத் தடையால் பொருட்கள் இன்றி மிகவும் கஷ்டப்படுகின்றார்கள் என்று விடுதலைப்புலிகள் பாதுகாப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பொலிசார் அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தை தென்பகுதி மக்கள் அடக்கப் பார்க்கிறார்கள். என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் நிலவுகின்றது என்றார்

இன்னொரு பொலிஸ்காரரான சரத் குணவர்த்தனா தான் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சென்றபோது ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தன்னைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றும் கூறினார். —ம

# தென்பகுதியில் மீண்டும் வெள்ளப் பெருக்கு

(கொழும்பு)

தென்பகுதியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை மாவட்டத்தில் நாரவம்கொட, கத்துவன்கொட, கராகொட, மிடிகல, காராதோட்ட உட்பட பல கிராமங்கள் இரண்டுமாத காலத்துக்குள் இருதடவைகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது இதனால் 2000 பேர் அகதிகளாக பாடசாலைகளிலும் கோவில்களிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

நில்வள, கிராமத்து ஓயா என்பனவற்றின் நீர் மட்டங்கள் உயர்ந்து வருவதால் மேலும் வெள்ளப்பெருக்கின் அனர்த்தம் கூடலாம் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். (மரி)

# 8 பேரை சுட்டுக்கொன்றவர் தானும் சுட்டு தற்கொலை

(நியூயோர்க்)

சன்பிரான்சிஸ்கோவிலுள்ள சட்ட அலுவலகம் ஒன்றில் புகுந்து குழப்பத்தை ஏற்படுத்திய துப்பாக்கி நபர் ஒருவர் எட்டுப்பேரை சுட்டுக்கொன்றதுடன் இறுதியில் தன்னையும் சுட்டுத்தற்கொலைசெய்து கொண்டார்

இச்சம்பவத்தில் 15 பேருக்கும் அதிகமானோர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளானதாகவும் இதில் 8 பேர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின்பின் பொலிசாரிடம் சிக்கிய துப்பாக்கி நபர் தன்னைத்தானே சுட்டு தற்கொலைசெய்து கொண்டார். சட்ட நிறுவன வழக்கொன்றில் இவர் குற்றம் சாட்டப்பட்டிருந்தார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

# கடற்படை கப்பலிருந்து பீரங்கித் தாக்குதல்!

(பண்டத்தரிப்பு)

கடந்த சில தினங்களாக காரைநகர் கடற்பரப்பில் ரோந்துசுற்றில் ஈடுபட்டுவரும் கடற்படை கப்பலில் இருந்து மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை காரைநகர் வலந்தலை பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அடிக்கடி பொன்னாலை, மூளாய் ஆகிய இடங்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். பெரும்பாலும் இரவு வேளைகளில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டுவருகிறது. (72-வி)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் எதிர்பாராத விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி ஒருவர் நேற்றுமுன் தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்

2-ம் லெப்டினன் கேடயன் (பாலசுப்பிரமணியம் சசிமாஹரன் - கொழும்பு) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## சிரமதான வேலை

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை மூள்ளிக் கிராமத்தில் வாய்க்கால் சிரமதானவேலை இன்றும் நடைபெறுகின்றது. நேற்று நடைபெற்ற வேலையில 150க்கு மேற்பட்ட மக்கள் பங்குபற்றினர்.

## டென்னிஸ்

## ஸ்ரெபிகிறுப் சாம்பியன்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் சாம்பியன் பட்டத்தை ஜேர்மனியைச் சேர்ந்த வீராங்கனை ஸ்ரெபிகிறுப் மீண்டும் தக்கவைத்துக் கொண்டார்.

இவர் நேற்று நடைபெற்ற ஒற்றையர் இறுதி சம்பியன் மோதலில் யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த டியற்ரு நவரட்டிலோவை தோற்கடித்து சாம்பியன் கேடயத்தைப் பெற்றார். (வி)

# நாஞ்சிலுக்கு மீண்டும் தி. மு. வில் இடமில்லை

(சென்னை)

தி. மு. க. வின் முன்னாள் பொதுச்செயலாளர் திரு நாஞ்சில் மனோகரனை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்வதில்லையென்று நேற்று சென்னையில் கூடிய தி. மு. க. செயற்குழு முடிவு செய்துள்ளது.

கட்சியின் தலைவர் திரு. மு. கருணாநிதியின் தலைமையில் கூடிய செயற்குழு மேற்படி முடிவை ஏகமனதாக எடுத்தது.

தன்னைத் தூண்டிவிட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டி திரு. முத்துராமலிங்கத்தின் மீதும், திரு. ராமச்சந்திரன் மீது நடவடிக்கை எடுக்கும்படி நாஞ்சில் மனோகரன் சமர்ப்பித்த அறிக்கையை செயற்குழு நிராகரித்துவிட்டது.

இதேநேரம் கோபாலசாமி எழுதிக் கொடுத்த மன்னிப்புக் கடிதத்தைச் செயற்குழு ஏற்றுக் கொண்டு திரு. கோபாலசாமியின் விவகாரத்தை அப்படியே விட்டு விடுவதென்றும் சபை முடிவு செய்தது. (வி)

## தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதேவேளை அஸாம், பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும் எல். ரி. ரி. ஈ க்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதைதான் நம்புவதாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜேஸ்பைலட் தெரிவித்துள்ளார்.

தமிழக கரையோரமாக சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை எல். ரி. ரி. ஈ. யினர் இறக்கி வருகிறார்கள் என்றும் பம்பாயில் இனமாதங்களுக்கு முன்னர் வெடித்த குண்டுகளுக்கு இவை சமமானவை என்றும் அவர் கூறினார். (வி)

## ருஹுணு கப்பலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் யாழ். அனுப்பப்பட்ட பொருள்கள் முழுவதையும் புலிகள் கொள்ளையடித்ததாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டது தெரிந்ததே. —ரி

## வடபகுதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற கப்பலில் 1700 மெ. தொன் அரிசி, மா மற்றும் நிவாரணப் பொருட்கள் வடபகுதிக்கு ஏற்றும்வேலை நடைபெறுவதாகவும் மன்னார் தீவுக்கு 1,450 மெ. தொன் நிவாரணப் பொருட்கள், கட்டடப் பொருட்கள் கப்பலில் ஏற்றப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாக கொழும்புபத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ரி)

## இனப்பிரச்னையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்களப் பேரினவாதிகளின் விருதுக்குப் பதிலாக தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்ற உடன்பாட்டை அரசு திடீரென இடைநிறுத்திய செயல் தீவிர தமிழின விரோதப் போக்கையே எடுத்துக் காட்டுகின்றது.

தமிழரின் இனப்பிரச்னைக்கு தீர்வாக அரசியல் நகர்வுகளை அல்ல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள புதியஅரசு முடிவெடுத்துள்ளது.

தமிழரின் தாயகமான வடக்கு-கிழக்கு அரசியல் விவகாரங்களில் முடிவெடுக்கும் உரிமையும், நடைமுறைப் படுத்தும் அதிகாரமும் இராணுவத்தின் கைகளைச் சென்றடைந்துவிட்டது என்பதை கைதிகளின் விடுதலை விவகாரம் எடுத்துக்காட்டிவிட்டது. —வி-ரி

## ஏழாயிரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக சிறப்பு ஆணையர் சி. என். இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த 7000 பேர் மட்டுமே இலங்கைக்கு செல்ல தற்போது விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்றும் இவர்களில் 450 பேரை ஏற்றிக்கொண்டு சென்னையில் இருந்து திருகோணமலைக்கு ஒரு கப்பலும் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு 100பேரை ஏற்றிக் கொண்டு ஒரு கப்பலும் இலங்கை நோக்கி செல்லவிருப்பதாக தெரிவித்த அவர் அநேகமாக அடுத்த மாதம் 15ம் திகதி இலங்கையை சென்றடையும் என்றார்.

தமிழகத்தில் அகதிகளாகப் பதிவு செய்த 82,000 பேரில் கடந்த ஆண்டு ஜனவரியில் இருந்து செப்டம்பர் வரை 29105 அகதிகள் மாத்திரமே இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கரும்புலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்துவர்.

இறுதி நிகழ்வாக கோட்ட மட்டத்தில் பொதுக்கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

வடமராட்சியில் முதற்கரும்புலி கப்டன் மில்லர் அவர்கள் தாக்குதல் நடாத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில் மாலை 7-05 மணிக்கு கரும்புலிகள் நினைவு நடுகல் திரை நீக்கமும், கரும்புலிகள் உருவப்படத்திறப்பு விழாவும் நடைபெற்று, இறுதியில் மத்திய மகாவித்தியாலய அரங்க மைதானத்தில் பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

தென்மராட்சியில் மீசாலை-கண்டி வீதி ஐயாகடை சந்தியில் நிறுவப்பட்ட கரும்புலிகளின் உருவப்படம் காலை 7-30 மணிக்குத் திரை நீக்கம் செய்துவைக்கப்படும். முதல் கரும்புலி வீரச்சாவடைந்த மாலை 7-05மணிக்கு மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலய அரங்கமைதானத்தில்பொதுக் கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

வலிகாமம்: மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் மாலை 7-05 மணிக்கு பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் தமிழீழ மக்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வேட்டுக்கொள்கின்றோம்என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ரி)

## இலங்கையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம். இதை பாதுகாத்து காப்பாற்றவேண்டியது இராணுவத்தினரின் கடமையாகும். இவ்வாறு இராணுவத் தவபதி மேற்படி வைபவத்தில் மேலும் கூறினார். (வி)

## தெல்லிப்பழை... 

## தெப்பிகலகாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

## மேல்மாகாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுசன ஐக்கிய முன்னணிக்கு 45 ஆசனங்கள் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 41 ஆசனங்கள். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு 17 ஆசனங்கள்.

ஜனநாயக ஐக்கிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேரும் பட்சத்தில் 58 ஆசனங்கள் உள்ளன. இதனால் அரசாங்கியில் இருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சியாகிவிடும்.

இதுபற்றி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியும் இணைவது சம்பந்தமாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன என்றார். (ம-ரி)

## பிரேமாவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பொலிஸ் அதிபர் லோறனசின் இரகசியப் படையை பிரேமதாசா தனக்குதவியாக ஏற்படுத்தினார், அவர் இன்னாத நேரத்தில் அது கலைக்கப்பட்டுள்ளது.

ஹேமா பிரேமதாசா பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளாரா? என்று சிறிசேன கூறேயிடம் கேள்விக்கு அது கோதையை ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைதான் எனது கொள்கை என்று கூறினார்.

பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் இருந்த பல நியமனங்கள் ரத்துச் செய்ததினால் ஏதும் வித்தியாசம் இல்லை எனது அபிப்பிராயப்படி பிரேமதாசாவின் கொள்கையே தற்போதைய ஜனாதிபதி நடைமுறைப்படுத்துகிறார் ஆனால் சில கொள்கைகள் அமுல்படுத்துவதில் மாத்திரம் தான் வித்தியாசம் இருக்கிறது என்றார். (ம)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் விதாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B